முற்பகல் 11–30

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னுடைய அனுமதியில்லாமல் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள். உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம் அல்லவா? (குறுக்கீடுகள்).*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆய்வில் இருப்பதை நீங்கள் வற்புறுத்த முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசலாம். வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள்.*

4. அறிக்கைகள் அளித்தல்—*தொடர்ச்சி*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *தொலைநோக்குத் திட்டம்–2023–ன்மூலம் உலகத்திற்கே வழிகாட்டும்வகையில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் ஒட்டுமொத்த உலக அரசியலையும் தன் நுண்ணறிவால் அலசி ஆராய்ந்து பார்க்கும் தலைசிறந்த ஆளுமைத் தகுதியைப் பெற்று, நாடே போற்றும்*